## வெள்ளிக்கிழமை (ஜும்ஆ குத்பா) உரை

# தலைப்பு: கவலைகள் மற்றும் துயரங்களுக்கான நிவாரணம்

**நாள்: 17 ஸஃபர் 1448 ஹிஜ்ரி / 31 ஜூலை கி.பி 2026**

## முதல் குத்பா உரை

நிச்சயமாக அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனையே நாம் புகழ்கிறோம்; அவனிடமே உதவி தேடுகிறோம்; அவனிடமே பாவமன்னிப்பு கோருகிறோம். நமது உள்ளங்களின் தீமைகளிலிருந்தும், நமது தீய செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டுகிறானோ அவரை வழிகெடுப்பவர் எவருமில்லை; எவரை வழிகேட்டில் விட்டுவிடுகிறானோ அவரை நேர்வழிப்படுத்துபவர் எவருமில்லை. வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை என்றும்; முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

"நம்பிக்கைகொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், நீங்கள் முஸ்லிம்களாகத் தவிர மரணிக்காதீர்கள்." (அல்குர்ஆன்,ஆலு இம்ரான் 3 : 102)

"மனிதர்களே! உங்கள் இறைவனை அஞ்சுங்கள்; அவன் உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்; அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான்; அவ்விருவரிலிருந்தும் ஏராளமான ஆண்களையும் பெண்களையும் பரப்பினான். எவனைக் கொண்டு நீங்கள் ஒருவரையொருவர் கேட்கிறீர்களோ அந்த அல்லாஹ்வுக்கும், இரத்த பந்த உறவுகளுக்கும் அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களை விழிப்போடு கண்காணிப்பவனாக இருக்கிறான்." (அல்குர்ஆன், அந்நிஸா 4 : 1)

"நம்பிக்கைக் கொண்டோரே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நேரான சொல்லைச் சொல்லுங்கள். அவன் உங்கள் செயல்களை சீராக்குவான்; உங்கள் பாவங்களை மன்னிப்பான். எவர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிகிறாரோ, அவர் மகத்தான வெற்றியடைந்துவிட்டார்." (அல்குர்ஆன், அல்அஹ்ஸாப் 33 : 70-71)

### இறைதுதிக்குப் பின் :

நிச்சயமாகச் செய்திகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டல்களில் மிகச் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலாகும். காரியங்களில் மிகவும் கெட்டது (மார்க்கத்தில்) புதிதாக உண்டாக்கப்பட்டவையாகும். புதிதாக உண்டாக்கப்பட்டவை அனைத்தும் பித்அத் ஆகும்; பித்அத்கள் அனைத்தும் வழிகேடாகும்; வழிகேடுகள் அனைத்தும் நரகத்தில் சேர்க்கும்.

## இஸ்லாமிய பெருமக்களே!

அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிவானாக! இந்த உலகம் சோதனைக்கான களமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நோய்கள், கஷ்டங்கள், சோதனைகள் மற்றும் துயரங்கள் காரணமாக மனிதனுக்கு ஏற்படும் கவலைகளும் துக்கங்களும் இந்த உலக வாழ்க்கையின் இயற்கையான இயல்புகளாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகிறான்: "நிச்சயமாக நாம் மனிதனைக் கஷ்டத்தில் மூழ்கியவனாகவே படைத்துள்ளோம்." (அல்குர்ஆன், அல்பலத் 90 : 4) அதாவது, கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்கொண்டு போராடும் நிலையிலேயே அவன் இருக்கிறான்.

இதனால்தான் சொர்க்கம் இந்த உலகத்திலிருந்து வேறுபடுகிறது; ஏனெனில் சொர்க்கத்தில் கவலையோ, துக்கமோ கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்: "அங்கு அவர்களுக்கு எவ்விதக் களைப்பும் தீண்டாது; அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்படுபடவும் மாட்டார்கள்." (அல்குர்ஆன், அல்ஹிஜ்ர் 15 : 48)

அங்குள்ளவர்களின் உள்ளங்கள் எந்தவொரு வார்த்தையினாலும் வேதனை அடையாது. அல்லாஹ் கூறுகிறான்: "அங்கு அவர்கள் வீணானவற்றையோ, குற்றஞ்சாட்டும் பேச்சையோ கேட்கமாட்டார்கள். ஆயினும் 'ஸலாம், ஸலாம்' (சாந்தியும், சமாதானமும்) என்ற சொல்லையே செவியுறுவார்கள்." (அல்குர்ஆன், அல்வாகிஆ 56 : 25-26)

## அல்லாஹ்வின் அடியார்களே!

துக்கங்களும் கவலைகளும் அல்லாஹ்வை நோக்கிச் செல்லும் பாதையில் குறுக்கிடும் தற்காலிகமான தடைகளாகும். அதனால் தான் அல்லாஹ் தன் வேதத்தில் எங்குமே கவலைப்படுவதை ஏவவோ, அதைப் புகழவோ, அதைத் தேடுவதற்காக எந்தப் பரிசையோ நன்மையையோ வாக்களிக்கவோ இல்லை. மாறாக, பல இடங்களில் அதிலிருந்து தடுத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: "நீங்கள் தளர்ந்துவிடாதீர்கள்,

கவலையும் படாதீர்கள்; நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் நீங்களே உயர்ந்தவர்கள்." (அல்குர்ஆன், ஆலு இம்ரான் 3 : 139)

எனவே, ஒரு அடியான் தன் வசமுள்ள வழிகளைக் கொண்டு கவலைகளையும் துக்கங்களையும் விரட்ட முயற்சிப்பது கடமையாகும்; அவற்றின் பின்னே ஓடக்கூடாது. இதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவலையை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிப் பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்:

«اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ، وَالْعَجْزِ وَالْكَسَلِ، وَالْبُخْلِ وَالْجُبْنِ، وَضَلَعِ الدَّيْنِ، وَغَلَبَةِ الرِّجَالِ»

"இறைவா! கவலை, துக்கம், இயலாமை, சோம்பல், கஞ்சத்தனம், கோழைத்தனம், கடனின் சுமை, மனிதர்களின் அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்." (நூல் : புகாரி, அறிவிப்பவர் : அனஸ் (ரழி)

மேலும், ஒரு அடியான் தன் சகோதரனை கவலையிலோ துயரத்திலோ இருப்பதைக்கண்டால், அவனது கவலையைப் போக்கவும், அவனது மனதைத் தேற்றவும் முயல்வது விரும்பத்தக்கதாகும். அல்லாஹ் தன் நபியைப் பற்றிக் கூறும்போது: "அவர் தன் தோழரிடம்: 'கவலைப்படாதே, நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்' என்று கூறியபோது அல்லாஹ் அவருக்குத் தன் புறத்திலிருந்து மன நிம்மதியை அளித்தான். ..." (அல்குர்ஆன், அத்தவ்பா 9 : 40)

உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்: "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சிரிக்க வைக்கும் வகையில் நான் ஏதேனும் ஒரு வார்த்தையைக் கூறுவேன்." (புகாரி, முஸ்லிம்)

## இஸ்லாமிய சமூகமே!

கவலைகளையும் துக்கங்களையும் விரட்டுவதற்கான மிகப்பெரிய காரணங்களில் ஒன்று : விதியின் மீது (களா, கதர்) நம்பிக்கை வைப்பதாகும். அல்லாஹ் அடியானுக்கு எதை விதித்துள்ளானோ அது நிச்சயமாக நடந்தே தீரும். அல்லாஹ் கூறுகிறான்:

"பூமியிலோ அல்லது உங்களுக்கோ எந்த ஒரு துன்பம் சம்பவித்தாலும், அது ஏற்படுவதற்கு முன்னதாகவே (லவ்ஹுல் மஹ்பூல் எனும்) பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக இலகுவானதாகும். உங்களை விட்டும் தவறிப்போனதைப் பற்றி கவலைப்படாமல் இருப்பதற்கும், அவன் உங்களுக்கு வழங்கியதற்காக நீங்கள் கர்வம் கொள்ளாதிருக்கவும்

(இதனை இறைவன் அறிவிக்கிறான்). பெருமையடிக்கும் தற்பெருமைக்காரர்கள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை." (அல்குர்ஆன், அல்ஹதீத் 57 : 22-23)

இந்த ஈமான் (நம்பிக்கை) நற்செயல்களுடன் இணைந்ததாக இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

"ஆணோ, பெண்ணோ இறைநம்பிக்கையாளராக இருந்து எவர் நற்செயல் செய்கிறாரோ, நிச்சயமாக அவரை நாம் தூய்மையான நல்ல வாழ்க்கையை வாழச் செய்வோம்; மேலும், அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றுக்கு ஏற்ற நற்கூலியை நிச்சயமாக அவர்களுக்கு வழங்குவோம்." (அல்குர்ஆன், அந்நஹ்ல் 16 : 97)

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"மூஃமினின் (இறைநம்பிக்கையாளனின்) காரியம் ஆச்சரியமானது! அவனது எல்லா காரியங்களும் அவனுக்கு நன்மையாக அமைந்துவிடுகிறது. இது மூஃமினைத் தவிர வேறு எவருக்கும் அமைவதில்லை. அவனுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டால், அவன் நன்றி செலுத்துகிறான்; அது அவனுக்கு நன்மையாகிறது. அவனுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால், அவன் பொறுமை காக்கிறான்; அதுவும் அவனுக்கு நன்மையாகிறது." (நூல் : முஸ்லிம் அறிவிப்பவர் : ஸுஹைப் பின் ஸினான் (ரழி)

கவலைகளும் துக்கங்களும் நீங்குவதற்கான மற்றொரு காரணம் : நபிமார்களையும் நல்லடியார்களையும் முன்மாதிரியாக எடுத்துக் கொள்வதாகும். அவர்கள் மிகப்பெரிய சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள், ஆயினும் பொறுமை காத்தார்கள். ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரழி) அறிவிக்கிறார்கள்: நான் நபிகளாரிடம்: "அல்லாஹ்வின் தூதரே! மனிதர்களில் மிகவும் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுபவர்கள் யார்?" என்று கேட்டேன். அதற்கு நபிகளார்: "நபிமார்கள்; பிறகு அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள நல்லோர்கள்; பிறகு அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ளவர்கள். மனிதன் அவனது மார்க்கப் பற்றின் அளவிற்கு ஏற்ப சோதிக்கப்படுகிறான். அவனது மார்க்க நம்பிக்கையில் உறுதியாக இருந்தால் அவனுக்கு சோதனையும் கடுமையாக இருக்கும். அவனது மார்க்கப் பற்றில் பலவீனம் இருந்தால் அதற்கு ஏற்ப சோதிக்கப்படுவான். ஒரு அடியான் தன் பாவங்கள் அனைத்தும் நீங்கி, பூமியில் எவ்விதக் குற்றமுமின்றி நடமாடும் வரை சோதனை அவனைப் பிரியவே செய்யாது" என்று கூறினார்கள். (நூல் :

திர்மிதி இமாம் அல்பானி (ரஹ்)அவர்கள் இந்த ஹதீஸ் ஸஹீஹ் என கூறியுள்ளார்கள்.)

மேலும், படைப்பினங்களின் துன்பங்களைப் போக்குவதும், அவர்களுக்கு நன்மை செய்வதும் கவலைகள் நீங்கக் காரணமாகும்; ஏனெனில் செயலாற்றலுக்கு ஏற்பவே பிரதிபலன் அமையும். ஸஹீஹ் முஸ்லிமில் அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழியில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவர் ஒரு முஃமினின் உலகக் கஷ்டங்களில் ஒன்றை நீக்குகிறாரோ, அல்லாஹ் மறுமை நாளின் கஷ்டங்களில் ஒன்றை அவரை விட்டும் நீக்குவான். மேலும், எவர் சிரமப்படுபவருக்கு இலகுபடுத்துகிறாரோ, அல்லாஹ் அவருக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் இலகுபடுத்துவான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை (மக்களிடமிருந்து) மறைக்கிறாரோ, அல்லாஹ் அவரை இவ்வுலகிலும் மறுமையிலும் மறைப்பான். மேலும், ஒரு அடியார் தனது சகோதரனுக்கு உதவியாக இருக்கும் காலமெல்லாம் அல்லாஹ் அந்த அடியாருக்கு உதவியாக இருப்பான்."

நான் கூறுவதைக் கேட்டு அல்லாஹ்விடம் எனக்காகவும் உங்களுக்காகவும் பாவமன்னிப்புத் தேடுகிறேன்; நீங்களும் அவனிடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்.

## இரண்டாவது உரை

அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அவனுக்கே அழகிய புகழும், சிறந்த துதியும் உரியது. வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை என்று சாட்சி கூறுகிறேன். அவன் சத்தியத்தைக் கூறுகிறான், நேர்வழியைக் காட்டுகிறான். முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகிறேன். அல்லாஹ் அவருக்கும், அவரது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் மறுமை நாள் வரை ஏராளமான சாந்தியும் சமாதானமும் பொழிவானாக!

### இறைதுதிக்குப் பின் :

கவலைகளும், துக்கங்களும் நீங்குவதற்கான மிகப்பெரிய வழிமுறைகளில் ஒன்று : பிரார்த்தனை (துஆ), இறைஞ்சுதல் மற்றும் இறைவனை அதிகமாகத் திக்ர் (நினைவு கூர்வது) செய்வதன் மூலம்

அல்லாஹ்விடம் தஞ்சமடைவதாகும். ஏனெனில், தன்னிடம் தஞ்சமடைபவரை அவன் கைவிடுவதில்லை. அவன் கருணையாளனும் இரக்கமுடையோனுமாவான். அல்லாஹ் கூறுகிறான்: "நெருக்கடிக்கு உள்ளானவன் அழைக்கும்போது அதற்குப் பதிலளித்து, துன்பத்தைப் போக்குபவன் யார்?" (அல்குர்ஆன், அந்நம்ல் 16 : 62)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: "(நபியே! உம்மைப் பற்றி) அவர்கள் (கேவலமாகக்) கூறுபவை உமது உள்ளத்தை நெருக்குகிறது என்பதை நிச்சயமாக நாம் அறிவோம். எனவே, உமது இறைவனின் புகழைக் கொண்டு தஸ்பீஹ் (துதி) செய்வீராக! ஸஜ்தா செய்பவர்களில் ஒருவராக இருப்பீராக! உமக்கு உறுதியான மரணம் வரும் வரை உமது இறைவனை வணங்குவீராக!" (அல்குர்ஆன், அல்ஹிஜ்ர்: 97-99)

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவலைகளும் துக்கங்களும் சூழும்போது நாம் ஓதுவதற்காக ஒரு மகத்தான பிரார்த்தனையை கற்றுத் தந்துள்ளார்கள். இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவரேனும் கவலையினாலோ துக்கத்தினாலோ பீடிக்கப்படும்போது பின்வருமாறு பிரார்த்தித்தால்:

« اللَّهُمَّ إِنِّي عَبْدُكَ، وَابْنُ عَبْدِكَ، وَابْنُ أَمَتِكَ، نَاصِيَتِي بِيَدِكَ، مَاضٍ فِيَّ حُكْمُكَ، عَدْلٌ فِيَّ قَضَاؤُكَ، أَسْأَلُكَ بِكُلِّ اسْمٍ هُوَ لَكَ، سَمَّيْتَ بِهِ نَفْسَكَ، أَوْ أَنْزَلْتَهُ فِي كِتَابِكَ، أَوْ عَلَّمْتَهُ أَحَدًا مِنْ خَلْقِكَ، أَوِ اسْتَأْثَرْتَ بِهِ فِي عِلْمِ الْغَيْبِ عِنْدَكَ، أَنْ تَجْعَلَ الْقُرْآنَ رَبِيعَ قَلْبِي، وَنُورَ صَدْرِي، وَجَلَاءَ حُزْنِي، وَذَهَابَ هَمِّي»

இறைவா! நிச்சயமாக நான் உனது அடியான், உனது ஆண் அடியானின் மகன், உனது பெண் அடியானின் மகன். எனது நெற்றிப் பொட்டு உனது கையில் உள்ளது. உன் கட்டளை என் விஷயத்தில் நிறைவேறக்கூடியது. என் விஷயத்தில் உனது தீர்ப்பு நீதியானது. உனக்குரிய அனைத்துப் பெயர்களைக் கொண்டும் உன்னிடம் கேட்கிறேன் - உனக்கு நீயே சூட்டிக்கொண்ட, அல்லது உனது வேதத்தில் இறக்கியருளிய, அல்லது உனது படைப்புகளில் எவருக்கேனும் கற்றுக்கொடுத்த, அல்லது உனது மறைவான அறிவில் நீயே வைத்துக்கொண்ட பெயர்களால் கேட்கிறேன் - இந்த குர்ஆனை என் உள்ளத்தின் வசந்தமாகவும், என் நெஞ்சின் ஒளியாகவும், என் துக்கத்தைப் போக்கும் மருந்தாகவும், என் கவலையை நீக்கும் காரணியாகவும் ஆக்குவாயாக!

...இவ்வாறு அவர் கூறினால், அல்லாஹ் அவரது கவலையையும் துக்கத்தையும் போக்கி, அதற்குப் பதிலாக நிம்மதியையும் நிவாரணத்தையும் வழங்குவான்."தோழர்கள்: "அல்லாஹ்வின் தூதரே!

நாங்கள் இந்த துஆவைக் கற்றுக்கொள்ள வேண்டுமா?" என்று கேட்டனர். அதற்கு நபிகளார்: "ஆம், இதனைக் கேட்பவர் அனைவரும் இதனைக் கற்றுக்கொள்வது அவசியமாகும்" என்றார்கள். (நூல் : அஹ்மத் இமாம் அல்பானி (ரஹ்)அவர்கள் இந்த ஹதீஸ் ஸஹீஹ் என கூறியுள்ளார்கள்.)

மேலும், புகாரி மற்றும் முஸ்லிமில் இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துன்பமான நேரங்களில் பின்வருமாறு கூறுவார்கள்:

«لَا إِلَهَ إِلَّا اللهُ الْعَظِيمُ الْحَلِيمُ، لَا إِلَهَ إِلَّا اللهُ رَبُّ الْعَرْشِ الْعَظِيمِ، لَا إِلَهَ إِلَّا اللَّهُ رَبُّ السَّمَوَاتِ وَرَبُّ الْأَرْضِ وَرَبُّ الْعَرْشِ الْكَرِيمِ»

"மகத்தானவனும் சகிப்புத்தன்மை உடையவனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை. மகத்தான அர்ஷின் இறைவனான அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை. வானங்களின் இறைவனும், பூமியின் இறைவனும், கண்ணியமிக்க அர்ஷின் இறைவனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை."

அல்லாஹ்விடம் நமது கவலைகளைப் போக்கவும், கஷ்டங்களை நீக்கவும், மகத்தான குர்ஆனை நமது உள்ளங்களின் வசந்தமாக ஆக்கவும் பிரார்த்திக்கிறோம். யா அல்லாஹ்! உனது அடியாரும் நபியுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், நேர்வழி நின்ற கலிஃபாக்கள், முஃமின்களின் அன்னையரான அவரது மனைவியர், ஏனைய தோழர்கள் மற்றும் மறுமை நாள் வரை அவர்களை அழகிய முறையில் பின்பற்றுவோர் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் பொழிவாயாக! உனது கருணை மற்றும் அருளால் அவர்களுடன் சேர்த்து எங்களையும் காப்பாயாக! நீயே கருணையாளர்களிலெல்லாம் மிக சிறந்தவன்!

யா அல்லாஹ்! ஈமானை (இறைநம்பிக்கையை) எங்களுக்குப் பிரியமானதாக்கி, அதனை எங்கள் உள்ளங்களில் அழகாக்குவாயாக! குஃப்ர் (இறைநிராகரிப்பு), பாவங்கள், மாறுசெய்தல் ஆகியவற்றை எங்களுக்கு வெறுக்கத்தக்கதாக்கி, எங்களை நேர்வழி பெற்றோரில் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் தாழ்த்திடுவாயாக!

யா அல்லாஹ்! குவைத்தையும் அதன் மக்களையும் அனைத்துத் தீமைகள் மற்றும் அசம்பாவிதங்களிலிருந்தும் பாதுகாப்பாயாக! இந்நாட்டையும் ஏனைய அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! எல்லைப்

பாதுகாப்புப் படையினர், பாதுகாப்புப் படையினர், தேசியக் காவல்படையினர், தீயணைப்புப் படையினர் மற்றும் நாட்டின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாதுகாப்பாயாக! அவர்களின் பாதங்களை உறுதியாக்குவாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அமீர் அவர்களுக்கும் அவரது துணை அமீர் அவர்களுக்கும் நீ விரும்பும் நற்செயல்களைச் செய்யத் தவ்ஃபீக் செய்வாயாக! அவர்களை நன்மை மற்றும் தக்வாவின் பால் வழிநடத்துவாயாக! எங்கள் இறுதிப் பிரார்த்தனையும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்! என்பதாகும்.

**(மாதிரி ஜும்ஆ உரை தயாரிப்புக் குழு)**